# ஆழ்வார்கள் துதி

(இயற்றியது ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிந்தகிருஷ்ணன் அழகர்)

### பொய்கை ஆழ்வார்

அய்ப்பசி திருவோணத்தே அத்திவரதனுகந்த  கச்சிதனில்,
அன்னமொடுகயலளையும் அணிகமலப் பொய்கையுதித்து,
இடராழி நீக்க இன்னரு இயற்பா ஓர் நூறு ஈந்த,
எழில் 'சங்காம்' பொய்கைப் பிரான் பணிமினே.

### பூதத்தாழ்வார்

அவிட்டத் தாரகை அய்ப்பசியில் 'அருள் பெற்றேன்' எனயுகக்க,
ஆழியானுக்கு  அன்பாம் தகளியில் ஆர்வ நெய் தீபமேற்ற,
மாமல்லைதனில் மலர் குருத்திமேல் மாயமாயுதித்த,
மாயோன் 'கதை' யாம் பூதப் பிரான் பணிமினே.

### பேயாழ்வார்

ஆழி வண்ணன் பொன்மேனி கண்டு அந்தாதி நூறுமீய,
ஆழ்மாயைதனை அறுத்தருளும் ஆலிலையான் 'நாந்தகமாய்',
அய்ப்பசி சதயத்தே அல்லி மலர்க்கண் அவதரித்த,
அருளாளர் பேயாழ்வார் அடிகள்தாம் பணிமினே.

### திருமழிசையாழ்வார்

'ஆழி'யின் அம்சமாய் அழிசையில் தை மகத்துதித்து,
நேமியானுக்குச்  சந்தவிருத்தமும் நேர்த்தியாய் அந்தாதியும்,
பண்ணிசைப் பாசுரங்கள் இருநூற்றுப்பத்து மாறு நல்கிய,
பக்திசாரராம்  மழிசைப் பிரான் பாதம் பணிமினே.

### மதுரகவியாழ்வார்

வேறொன்றும் வேண்டாது வியன் சடகோபனையே வேண்டி,
ஆறுடன் ஐந்து பாசுரங்கள் அவன் பொருட்டிசைத்து,
ஆழ்வார்க்கடியானாய் அவனியில் சித்திரைச் சித்திரையுதித்த,
அதிமதுர 'வைநதேயன்' அடிகள்தாம் பணிமினே.

### நம்மாழ்வார்

நால்வேதம் தமிழ் செய்து நம்மாழ்வார் என ஒளிர்ந்து,
நானிலக் குருகையுள் நல்ல வைகாசி விசாகம்தனில்,
நண்டமிழ் அடியார்கள் நாவினால் நவிற்று இன்பமெய்ய,
நலமருள் 'சேனை நாதன்' நம்மிடையுதித்தானெனப் பணிமினே.

### குலசேகராழ்வார்

மாசித் திங்கள் மன்னு புகழ் ராமனுகந்த புனர்வசுவில்,
மாயோன் மார்வக் 'கவுத்துவ'மாய் மண்ணிலுதித்து,
திருமொழியோர் நூறுமைந்தும் திருமாலுக்கிசைத்த,
திருவஞ்சிக்களக்கோன் திருவடிகள்தாம் பணிமினே.

### பெரியாழ்வார்

நல்லதோர் வேதமோதி நாரணனே பரமென நாட்டி,
நற்றுழாய்யடி விளைந்த நாச்சியர்க் கத்தனாய்,
பூரணனுக்கே பணி செய்ய புனித ஆனிச் சோதியுதித்த,
'புள்ளரையன்' தோன்றல் புகழ் விட்டுசித்தர் பணிமினே

### ஸ்ரீ ஆண்டாள்

திருவாடிப் பூரம் விளங்கத் திருத்துழாய்கண்லர்ந்து,
திருமாலைச் சித்தம் கொண்டார் திருமகளாய் வளர்ந்து,
திருப்பாவை முப்பதொடு தீந்தமிழ் நாச்சியார் திருமொழியும்,
திருவாய்மலர்ந்த தென்புதுவை 'மண்மகள்' பணிமினே.

### தொண்டரடிப்பொடியாழ்வார்

மார்கழியில் மண்டங்குடியதனில் மாலவன் 'வனமாலையாய்',
மண்டலமே மகிழ மாசுறு கேட்டையிலுதித்து,
மாயவன் மாதவனுக்கு மனங்கவர் திருமாலை ஓதிய,
மன்னு புகழ் தொண்டரடிப்பொடி மலரடிகள் பணிமினே.

### திருப்பாணாழ்வார்

உறையூரில் கார்திகையில் ஒளிர் கண்ணனுகந்த ரோகிணியில்,
உலகுதித்தார் முனிவாகனன் ஒப்பிலா 'மருவின்' திரு உருவாய்,
உயரரங்கன் உருவழகை ஒன்பதோடுமொன்று பாசுரத்தால்,
உலகோர்க்குணர்த்திய உயர் பாணர் பாதம் பணிமினே.

### திருமங்கையாழ்வார்

கார்திகைக் கிருத்திகையில் கலிமலிய இப்பூமி தனில்,
நேர்த்தியாய்க் குரையூரில் நின்றருள வந்துதித்து,
சாற்றினான் பாமாலை சதம் பன்னிரண்டுடன் ஒர் ஐம்பத்து மூன்றும்,
'சார்ங்க'மாய் நாலு கவிப்பெருமாளெனப் பணிமினே

@@@@@@

---

குறிப்பு

நாந்தகம் = வாள்; புள்ளரையன் = கருடன்; மண்மகள் = பூமி .தேவி;
கவுத்துவம் = கௌஸ்துபம்; மரு = ஸ்ரீவத்சம்; சார்ங்கம் = வில்;
நாலு கவிப்பெருமாள் = விருது

---

[Song composed by Thirukkudanthai Aandavan Thiruvadi, A.GOVINDAKRISHNAN (IA& AS), D211 Kumara Dhara Block, National Games Village, Koramangala, Bangalore, 560047. (080 25713209) - Mail ID: alagar_g@yahoo.com]